# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.199 of 2025
Prosecution Witness No.P.W. 1(L.W.1)

| | |
|---|---|
| Name | Suresh |
| Father/Husband Name | Thangavel |
| Calling/Occupation | Head Constable |
| Age | 44 |
| Address | 3/298, Eariyoor Village,<br>Melmangkuppam post,<br>K.V.Kuppam Taluk. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 01.08.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது பரதராமி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 2023 ஆம் ஆண்டு மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வந்தபோது 26.07.2023 அன்று மாலை சுமார் 16.00 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் அவர்களுடன் நானும் என்னுடன் பணி செய்யும் கிரேடு–1– 2091, ராஜா அரசு என்பவரும் மது விலக்கு சம்மந்தமாக அரியூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சதுப்பேரி கிராமம் எம்ஜி ஆர் நகர் மார்கமாக சென்ற போது ஒரு முட்புதரிடம்

ராஜ்குமார், வயது 29, த/பெ. அன்பழகன், எம்,ஜி,ஆர் நகர், சதுப்பேரி கிராமம் என்பவர் ஒரு வெள்ளை நிற கேனில் பிளாஸ்டிக் டம்ளரில் அருகிலிருந்தவர்களுக்கு ஊற்றி கொடுத்து கொண்டிருந்தார். போலீசார் பார்டியாகிய எங்களை கண்டதும் அவர் தப்பிக்க முயற்சி செய்தபோது நாங்கள் பிடித்து பிளாஸ்டிக் கேனிலிருந்ததை முகர்ந்து பார்க்க அது ஒரு விதமான விஷ வாடையும் நெடியும் இருந்தது. மேற்படி ராஜ்குமார் என்பவரை விசாரித்தபோது அது சாராயம் என்றும் தான் சாராயம் விற்றதை ஒப்பு கொண்டார். காவல் ஆய்வாளர் அவர்கள் அவரை 16.15 மணிக்கு கைது செய்து விசாரித்தபோது அவர் தானாகமுன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை 16.30 மணி முதல் 17.15 மணி வரை பதிவு செய்தார். பின்பு சம்பவ இடத்திலிருந்த வெள்ளை கேனிலிருந்த திரவத்தையும் அதன் அருகிலேயே இருந்த 3 லாரி டியுபுகளில் 40 லிட்டர் வீதம் 120 லிட்டார் இருந்த சாராயத்தையும் பிளாஸ்டிக் டம்ளர் ஒன்றையும் Atrophin sulphate என்ற உடைந்த 8 குப்பிகளையும் உடையாமல் இருந்த 6 குப்பிகளையும் 17.30 மணிக்கு மகசரில் கைப்பற்றினார்.

பின்பு கேனிலிருந்து சாராயத்திலிருந்தும் லாரி டியபுகளில் இருந்த சாராயத்திலிருந்து சுழற்சி முறையில் 750 மில்லி லிட்டர் கொண்ட கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மில்லி லிட்டர் எடுத்து வாய்ப்புறம் கட்டி துணியால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது. மாதிரிக்கு எடுத்தது

போக மீதமிருந்த சாராயத்தை யாருக்கு பயன்படாதவாறு 17.45 மணிக்கு அழிப்பு மகசர் தயார் செய்து சம்பவ இடத்திலேயே கொட்டி அழிக்கப்பட்டது. மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரிலும் அழிப்பு மகசரிலும் நானும், என்னுடன் வந்திருந்த கிரேடு –1, 2091 ராஜா அரசு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

பின்பு எதிரி கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து ஆகியவற்றுடன் நிலையம் வந்து 18.30 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற எண்.561/2023 ன் U/s.4(1)(i), 4(1)(aaa), 4(1–A)(ii) of TNP Act r/w 328 of IPC கீழ் வழக்கு பதிவு செய்தார். வழக்கு பதிவு செய்ய ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தோம்.

என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசரில் உள்ள முதல் கையொப்பங்கள் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ. 1** ஆகும். அழித்தல் மகசர் **அ.த.சா.ஆ. 2** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் 2–750 மில்லி லிட்டர் கொள்ளவு கொண்ட சாராயம் மாதிரிக்கு எடுக்கப்பட்ட கண்ணாடி பாட்டில்கள் வழக்கில் கைப்பற்றப்பட்டது. அந்த கண்ணாடி பாட்டில்கள் முறையே **சா.பொ. 1 மற்றும் 2** ஆகும். வெள்ளை நிற கேன் **சா.பொ.3** ஆகும். ஆரஞ்சு கலர் டம்ளர் **சா.பொ. 4** ஆகும். உடைந்த 8 அட்ரோபின் குப்பிகள் **சா.பொ. 5 வரிசை** ஆகும். உடையாத 6 அட்ரோபின் குப்பிகள் **சா.பொ. 6 வரிசை** ஆகும்.

வெள்ளை நிற கேனில் 4 லிட்டர் சாராயம் இருந்தது. மொத்தம் 124 லிட்டர் சாராயம் இருந்தது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்திலிருந்து எந்த வாகனத்தில் எத்தனை மணிக்கு யார் யார் கிளம்பினோம் என்றால் மாலை சுமார் 15.00 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து கிளம்பினோம். காவல் நிலையத்திலிருந்து எந்த வழியாக நாங்கள் சம்பவ இடம் சென்றோம் என்றால் சிஎம்சி வழியாக சென்றோம்.

சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு வேறு எந்தெந்த இடத்தில் சோதனை செய்துவிட்டு சென்றோம் என்றால் டோல்கேட் என்ற இடத்தில் சோதனை செய்து விட்டு சதுப்பேரி பக்கம் சென்றோம்.

சம்பவ இடத்தில் ஓடியவர்கள் யாரையாவது பிடித்து விசாரைனை செய்தோமா என்றால் எங்களை பார்த்தவுடன் அவர்கள் ஓடிவிட்டார்கள். பொதுவாக ஒரு காவல் நிலைய எல்லைக்குள் நாங்கள் மது விலக்கு சம்மந்தமாக ரோந்திற்கு சென்றால் அந்த சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டு செல்ல வேண்டும் என்றால் தகவல் சொல்வதில்லை.

எத்தனை மணிக்கு ஆஜர் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் 16.00 மணிக்கு கொடுத்தார். யார் ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதியது என்றால் மடி கணினியில் டைப் செய்தோம். யார் டைப் செய்தது என்றால் சரியாக நினைவில்லை.

எனக்கு டைப் செய்ய தெரியுமா என்றால் தெரியும். ஆனால் நான் டைப் செய்யவில்லை. என்னுடன் வந்த காவலர் டைப் செய்தாரா என்று நினைவில்லை. டைப் செய்த பிறகு பிரிண்ட் எங்கு எடுக்கப்பட்டது என்றால் அவர் எங்கோ வெளியில் சென்று பிரிண்ட் எடுத்து வந்தார்.

மற்ற 2 காவலர்களும் சம்பவ இடத்தில் தான் இருந்தோம். நான் சொன்ன சங்கதியை என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரி சாராயம் விற்றார் என்று ஊர் மக்களோ அல்லது கிராம நிர்வாக அலுவலரோ யாரும் புகார் கொடுக்கவிலலை என்றால் ஆம் புகார் கொடுக்கவில்லை.

எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் குப்பிகளை எந்த கடையிலிருந்து வாங்கினார் என்று சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. சாராயத்தை முகர்ந்து பார்த்தவுடன் தலை சுற்றல் வந்ததாக சொல்லும் நான் எந்த மருத்துவமனைக்கும் சென்று சிகிச்சை எடுத்து கொள்ளவில்லை.

நான் எதன் அடிப்படையில் லாரி டியுபுகளில் 120 லிட்டர் சாராயம் இருந்தது என்று சொல்கிறேன் என்றால் தோராயமாக தான் சொன்னேன். நான் ரோந்திற்கு செல்லும் போது Duty Roaster ல் எழுதிவிட்டு தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அது குறித்து ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும் எதிரியிடமிருந்து எந்தவிதமான சாராயமும் கைப்பற்றவில்லை என்றும் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். தப்பியோடியதாக சொல்லப்படும் நபர்களை ஆய்வாளர் அழைத்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றும் அந்த இடத்தில் எப்போதும் ஆட்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான்.

பொது மக்கள் யாரையும் சாட்சியமாக கேட்டு கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். யாரும் முன் வரவில்லை. மேற்சொன்ன சங்கதியை என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.08.01 17:49:05 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.199 of 2025
Prosecution Witness No.P.W.2 (L.W.2)

| | |
|---|---|
| Name | ராஜ அரசு |
| Father/Husband Name | தஞ்சான் |
| Calling/Occupation | Head Constable |
| Age | 40 |
| Address | Paradamani |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 01.08.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது தலைமை காவராக பரதராமி காவல் நிலையத்தில் பணி செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். நான் இதற்கு முன்பு வேலூர் மது விலக்கு அமல் பிரிவில் பணி செய்தபோது காவல் ஆய்வாளர் என்னையும் அ.சா.1 யையும் ரோந்து பணிக்காக அழைத்து கொண்டு போனார். அங்கு சென்று பார்க்கும்போது அங்கு ஆட்கள் குடித்து கொண்டிருந்தார்கள். ராஜ்குமார் என்பவரை சதுப்பேரில் முட்புதரில் பிடித்துவிட்டார்கள். அவர் கேனில் வைத்து விற்று

கொண்டிருந்தார். அங்கு 3 டியுபுகளில் சாராயம் இருந்தது. அட்ரோபின் கண்ணாடி பாட்டில்கள் இருந்தது. அவைகளை கைப்பற்றி கொண்டோம். அதில் மாதிரிக்கு எடுக்கப்பட்டது. அதிகமாக இருந்ததை கீழே ஊற்றிவிட்டோம். பின்னர் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கிவிட்டு காவல் நிலையம் சென்றோம். அதன் பிறகு எதிரி ராஜ்குமாரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். ஆஜர் எதிரிதான் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். 3 டியுபுளில் சாராயம் இருந்தது. ஒரு டியுபில் 40 லிட்டர் இருந்தது. கேனில் பாதிக்கு மேல் சாராயம் இருந்தது. அதில் 4 லிட்டர் அல்லது 3 லிட்டர் இருக்கும். ஆய்வாளர் மகசர் தயார் செய்தார். ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எத்தனை பேர் காவல் நிலையத்திலிருந்து ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் 3 பேர் சென்றோம். மாலை 4 மணிக்கு புறப்பட்டு சென்றோம். மாலை 04.00 மணிக்கு கிளம்பி நேராக சம்பவ இடம் சென்றுவிட்டோம். பெருமாள் கோயிலுக்கு அடுத்து எந்த வழியாக சம்பவ இடம் சென்றோம் என்றால் டோல்கேட் வழியாக சென்றோம். சம்பவ இடத்தில் இருந்த நபர்கள் யாரையும் பிடித்து விசாரணை செய்யவில்லை என்றால் அவர்கள் ஓடிவிட்டனர். சுரேஷ் என்பவர் எவ்வளவு நேரம் டைப் செய்தார் என்றால் அரை மணி நேரம் டைப்

செய்தார். சாட்சி மீண்டும் யார் டைப் செய்தார் என்று தெரியாது என்று கூறினார்.

டைப் செய்த பிறகு எங்கு பிரிண்ட் எடுத்தோம் என்றால் ஆய்வாளர் பிரிண்ட் எடுத்து கையொப்பம் வாங்கினார். குப்பிகளின் ஓனர் யார் என்றும் அதை யாரிடமிருந்து எப்போது வாங்கினார் என்று எதிரி சொன்னாரா என்றால் ஆய்வாளரிடம் சொன்னதாக ஞாபகம்.

காவல் ஆய்வாளர் கைப்பற்றப்பட்ட பொருட்கள் புகைப்படம் எடுத்தாரா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் எதிரி சாராயம் வைத்திருக்கவில்லை என்றும அவரிடமிருந்து எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றவில்லை என்றும் அவர் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.08.01 17:49:19 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.199 of 2025
Prosecution Witness No.P.W. 3(L.W.5)

| | |
|---|---|
| Name | Dr.M.Jeevagan |
| Father/Husband Name | Manivannan |
| Calling/Occupation | Assistant Professor |
| Age | 37 |
| Address | Govt.Vellore Medical College<br>Vellore. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 01.08.2026.

(Accused Present)

சாட்சி நேரில் ஆஜரில்லை. சாட்சியை இணையதளம் மூலம் விசாரிக்க அனுமதி கோரி அதன் அடிப்படையில் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையிலிருந்து Video conference மூலம் அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கிறஞர் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் அரசு மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ பிரிவில் உதவி பேராசிரியாக பணி செய்து வருகிறேன். கடந்த 05.08.2023 அன்று வேலூர் மது விலக்கு அமல் பிரிவு குற்ற

எண்.561/2023 என்ற வழக்கில் தொடர்புடைய ரசாயண பகுப்பாய்வு ஆய்வு அறிக்கை என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட மாதிரியில் 5.6 மில்லி கிராம் அட்ரோபின் இருந்தது என கண்டறியப்பட்டு அந்த அட்ரோபின் மனித உடலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் குறித்து கருத்து பெறப்பட்டது. Alcohol and Atrophine கலந்த சாராயத்தை ஒரு மனிதன் உட்கொண்டால் அதிகபடியான தாகம், வாய்குமட்டல், அமைதியின்மை, பல்லாட்டம், தடுமாற்றம், கவன குறைவு, பலவீனம், நினைவாற்றல் குறைவது ஆகியவைகள் ஏற்படும். மேலும் மனம் பேதலிக்க நேரிடலாம். மனதில் மாற்றம் ஏற்பட்டு மன குழப்பங்களில் புரிந்து கொள்வதில் சிக்கலும் அதிக நாட்கள் அதை பயன்படுத்தினால் மன கோளாறும் குற்றம் புரிவதற்கான தூண்டுதலும் 8 மில்லி கிராமிற்கு அதிகமாக உட்கொண்டால் இறக்கவும் வாய்ப்புண்டு என்று நான் என்னுடைய கருத்தை தெரிவிதது சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்று என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அந்த சான்று **அ.த.சா.ஆ. 3** ஆகும். தடய அறிவியல் அறிக்கை **அ.த.சா.ஆ. 4** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

Atrophine கலந்துள்ளது என்பதை முகர்ந்து பார்த்தால் தெரியுமா என்றால் தெரியாது ஆய்வின் மூலமாக தான் தெரியும்.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN
Date: 2026.08.01 17:49:29 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.199 of 2025
Prosecution Witness No.P.W.4 (L.W.6)

| | |
|---|---|
| Name | Thiru.Senthilkumar |
| Father/Husband Name | Raja |
| Calling/Occupation | Inspector of Police |
| Age | 50 |
| Address | Vandhavasi,<br>Thiruvanamalai District. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 01.08.2026.

(Accused Present)

சாட்சி நேரில் ஆஜரில்லை. சாட்சியை இணையதளம் மூலம் விசாரிக்க அனுமதி கோரி அதன் அடிப்படையில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வந்தவாசியிலிருந்து Video conference மூலம் அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கிறஞர் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வந்தவாசி தெற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 26.07.20263 அன்று பகல் 16.00 மணியளவில் வேலூர் மது விலக்கு அமல் பிரிவில் காவல்

ஆய்வாளராகிய எனக்கு கிடைத்த தகவலின் பேரில் நானும் என்னுடன் தலைமை காவலர் திரு.சுரேஷ் மற்றும் முதல்நிலை காவலர் ராஜ அரசு ஆகியோர்களுடன் சதுப்பேரி எம்ஜிஆர் நகர் அருகில் உள்ள புதிடம் கண்காணித்து கொண்டு சென்றபோது அங்கு ஒரு நபர் அமர்ந்து கொண்டு சுமார் 5 லிட்டர் பிடிக்க கூடிய பிளாஸ்டிக் கேனிலிருந்து திரவம் போன்ற பொருளை பிளாஸ்டிக் டம்ளரில் ஊற்றி அருகில் இருந்தவர்களிடம் கொடுத்து பணத்தை வாங்க முற்பட்டவரை பார்டி சகிதம் மடக்கி பிடிக்க முயன்ற போது அருகிலிருந்தவர்கள் அனைவரும் தப்பி ஓடிவிட்டனர்.

பின்னர் உட்கார்ந்திருந்த நபரை பிடித்து விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் ராஜ்குமார் த/பெ. அன்பழன் என்றும் அரசு அனுமதி இல்லாமல் விஷ வாடையுடன் கூடிய நாட்டு சாராயத்தை விற்பனை செய்து கொண்டிருந்ததாக கூறியதன் பேரில் கைது செய்வதற்கான காரணம் கூறி 16.15 மணிக்கு காரணம் கூறி கைது செய்து உடனிருந்த தலைமை காவலர் சுரேஷ மற்றும் ராஜா அவர்கள் முன்னிலையில் மேற்படி எதிரியை விசாரணை செய்ய அவர் எந்த வித துன்புறத்தலும் ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பகல் 16.30 மணிக்கு பதிவு செய்து பின்னர் மாலை 17.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி வைத்திருந்த 3 கருப்பு நிற லாரி டியுபுகளில் தலா 40 லிட்டர் வீதம்

சுமார் 120 லிட்டர் விஷ வாடையுடன் கூடிய நாட்டு சாராயம் மற்றும் சுமார் 5 லிட்டர் பிடிக்க கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனிலிருந்த சுமார் 4 லிட்டர் விஷ வாடையுடன் கூடிய சாராயம் ஆகிய மொத்தம் 124 லிட்டர் சாராயம் மற்றும் ஆரஞ்சு கலர் பிளாஸ்டிக் டம்ளர் –1 மற்றும் அட்ரோபின் சல்பேட் உடைந்த கண்ணாடி குப்பிகள்–8 மற்றும் உடையாத 6 அட்ரோபின் சல்பேட் குப்பிகள் ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினேன். கைப்பற்றிய சாராயத்திலிருந்து ரசாயண பகுப்பாய்விற்காக 3 லாரி டியுபுகள் மற்றும் வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனிலிருந்த விஷ வாடையுடன் கூடிய நாட்டு சாராயத்திலிருந்து சுழற்சி முறையில் 750 மில்லி லிட்டர் கொள்ளவு கொண்ட 2 வெள்ளை கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மில்லி லிட்டர் வீதம் எடுத்து வாய்ப்புறம் வெள்ளை துணியால் மூடி SHO சீல் வைக்கப்பட்டது. பின்பு கைப்பற்றப்பட்ட சாராயங்களையும் லாரி டியுபுகளையும் நிலையம் கொண்டுவர சாத்தியமில்லாததால் 17.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அழித்தல் மகசர் தயார் செய்து மாதிரிக்கு எடுத்தது போக மீதமிருந்த சாராயத்தை அங்கேயே கொட்டி அழிக்கப்பட்டது.

எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் 18.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி ராஜகுமார் மீது நிலைய குற்ற எண்.561/2023 U/s.4(1)(i), 4(1)(aaa), 4(1–A)(ii) of TNP Act r/w 328 of IPC படி வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

சம்பவ இடத்தில் சாட்சிகள் தலைமை காவலர் சுரேஷ் மற்றும் ராஜ அரசு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு சொத்தை நீதிமன்ற உத்தரவு ரசாயண பகுப்பாய்விற்கு உட்படுத்தினேன். பின்பு பகுப்பாய்வு அறிக்கை வழங்கிய அறிவியல் அலுவலர் சீனிவாசன் அவர்களையும் மருத்துவர் ஜீவகன் அவர்களையும் விசாரித்து உரிய சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் என் புலன் விசாரணையை முடித்து 05.08.2023 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ. 5** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் பொது நாட்குறிப்பு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். பொது நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதே போன்று கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சாராயம் குடித்துவிட்டு யாராவது உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொண்டார்களா என்றால் இல்லை. அதே முகர்ந்து பார்த்தபோது தலை சுற்றல் ஏற்பட்டதாக சொல்லும் நிலையில் நாங்கள் யாராவது மருத்துவமனை சென்றோமா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை அழிப்பதற்கு முன்பு புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை. சுரேஷ் என்பவர் எதிரி கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தை எவ்வளவு நேரம் டைப் செய்தார் என்றால் நானே தான் என்னுடைய மடி கணினியில் சுமார் முக்கால் மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்தேன். எங்கு சென்று பிரிண்ட் எடுத்தேன் என்றால் பக்கத்தில் சுமார் 50 மீட்டர் தூரத்தில் ஒரு ஜெராக்ஸ் கடை இருந்தது அதில் பிரிண்ட் எடுத்து வந்தேன்.

அந்த விவரத்தை இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அட்ரோபின் குப்பிகள் எங்கு வாங்கப்பட்டது என்று விசாரணை செய்து ஆவணங்களை கைப்பற்றினேனா என்றால் இல்லை. அட்ரோபின் குப்பிகளிலிருந்தவற்றை நான் தனிப்பட்ட முறையில் பகுப்பாய்விற்கு அனுப்பினேனா என்றால் இல்லை.

சம்பவம் நடந்த இடத்தில் ஜன நடமாட்டம் உள்ள பகுதி என்றால் இல்லை. தனி நபர் யாரிடமும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் வாங்கினேனா என்றால் தனி நபர்கள் யாரும் சாட்சியம் சொல்ல முன்வரவில்லை. நான் மேற்சொன்ன விவரத்தை இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் எதிரியை சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றும் அவரிடமிருந்து எந்தவிதமான சாராயமும்

கைப்பற்றவில்லை என்றும் அவர் எந்த விதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவிலலை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.08.01 17:49:40 +0530